பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 01 வியாழக்கிழமை 19.10.2023 அதிர்வு 80

## பஸ் விபத்தில் ஒருவர் மரணம்

**18 பேர் படுகாயம்**

பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் சாவடைந்துள்ளார்.

04 ▶

## அரசுக்கு எதிராக யாழில் கையெழுத்துப் போராட்டம்



- எஸ்.நிதர்ஷன் -

அரசுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இன்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் இன்று காலை 10 மணியளவில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

"ஐ.எம்.எப். மரணப் பொறியைத் தோற்கடிப்போம்", "ரணில் – மோடி திருட்டு ஒப்பந்தம் வேண்டாம்" எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# நாடாளுமன்றில் இன்று குழப்பம்!



## செங்கோலை அவமதித்த மானன்பெருமவுக்கு சபை அமர்வில் பங்கேற்க நான்கு வாரங்கள் தடை

*- சுடர் திலீபன் -*

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானன்பெருமவுக்கு இன்று முதல் நான்கு வாரங்களுக்குச் சபை அமர்வில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இன்று முற்பகல் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து சபாநாயகர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் முன்வைக்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 04 ▶

## ஊடகர் நிமலராஜனின் நினைவேந்தல் நிகழ்வு



யாழ்ப்பாணத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

## கல்முனை பொதுச்சந்தை சங்கம் ஹர்த்தாலுக்கு ஆதரவு இல்லை!



- பாறுக் ஷிஹான் -

ஹர்த்தாலுக்கு கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்கம் ஆதரவளிக்கவில்லை எனவும், 04 ▶

## விஜயகலா விடுதலை



- எஸ்.நிதர்ஷன் -

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை உருவாக்க வேண்டும் எனச் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார் எனக் கூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இன்று விடுதலை செய்யப்பட்டார்.

2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி 04 ▶



# நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை தற்காலிக நிறுத்தம்!

## ஜனவரியில் மீண்டும் சேவை தொடங்கும்

நாகப்பட்டினம் – காங்கேசன்துறை இடையே தொடங்கப்பட்ட பயணிகள் கப்பல் சேவை நாளை முதல் தற்காலிகமா இடைநிறுத்தப்படுகின்றது. மீண்டும் ஜனவரி மாதம் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் சேவை கடந்த 10 ஆம் திகதி முதல் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்தத் திகதியில் கப்பல் சேவை தொடங்கப்படவில்லை.

நிர்வாக காரணங்களால் கப்பல் போக்குவரத்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், 12 ஆம் திகதி காலை 7 மணிக்கு இந்தப் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அந்த திகதியிலும் கப்பல் சேவை இயக்கப்படாமல் 14 ஆம் திகதி பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்பட்டது.

நாகை துறைமுகத்தில் நடைபெற்ற விழாவில் பிரதமர் நரேந்திர மோடி காணொளி வாயிலாக பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

நாகப்பட்டினத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் மத்திய அமைச்சர் சர்பானந்த சேனா, தமிழக பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் பங்கேற்று கொடியசைத்து கப்பல் சேவையைத் ஆரம்பித்து வைத்தனர்.

அதன் பிறகு காலை 8.15 மணியளவில் 50 பயணிகளுடன் நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறை நோக்கிக் கப்பல் புறப்பட்டது.

காங்கேசன்துறையில் இருந்து மதியம் 1.45 மணிக்கு 29 பயணிகளுடன் புறப்பட்ட கப்பல் நாகை துறைமுகத்தை மாலை 5.15 மணிக்கு அடைந்தது.

மறுநாள் நாள் கப்பலில் பயணம் செய்ய வெறும் 7 பேர் மட்டுமே முன்பதிவு செய்திருந்ததால் கப்பல் சேவை இரத்துச் செய்யப்பட்டது.

இந்த நிலையில், நாளை 20 ஆம் திகதியுடன் நாகை – காங்கேசன்துறை இடையேயான பயணிகள் கப்பல் சேவை நிறுத்தப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இந்த சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

# நாணய நிதிய இரண்டாம் தவணை கடன் விரைவில் கிடைக்கும் வாய்ப்பு

## பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்படும் நீடிக்கப்பட்ட கடன் திட்டத்தின் இரண்டாம் தவணை விரைவில் பெற்றுக் கொள்ள முடியும் என்று பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதற்கான பேச்சுகள் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு ஏற்ப இரண்டாவது தவணையை ஒரே தடவையில் வழங்க சர்வதேச நாணய நிதியம் இணங்கினால் அது ஆச்சரியமான நிலைதான் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மேலும் நிறைவேற்றப்பட வேண்டிய மற்றும் உருவாக்கப்பட வேண்டிய நிலைமைகள் இருப்பதாகக் கூறியுள்ளார்.

அதற்கமைய, அதற்கான தவணைத் தொகை மிக விரைவில் கிடைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் ஊடகவியலாளர் நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு!





யாழ்ப்பாணத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை ஊடக அமையத்தின் செயலாளர் சி.நிதர்ஷன் ஏற்றிவைக்க, நிமலராஜனின் உருவப் படத்துக்கு மலர்மாலையை ஊடகவியலாளர் ம.நியூட்டன் அணிவித்தார்.


அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

போர்ச் சூழலில் யாழ்ப்பாணத்தில் இருந்து துணிவாக ஊடகப் பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சியின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி, ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.


இந்நிலையில், கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை அவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுததாரிகள், வீட்டின் யன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதன்போது அவர் எழுதிக் கொண்டு இருந்த கட்டுரைத் தாள் மீது சரிந்தே சாவடைந்தார்.

கொலையாளிகள் நிமலராஜனைப் படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக்குண்டு தாக்குதலையும் மேற்கொண்டனர். அதன்போது வீட்டில் இருந்த நிமலராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.











# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பஸ் விபத்தில்...

அத்துடன் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நாரம்மல, தம்பலஸ்ஸ பிரதேசத்தில் இன்று இடம்பெற்றுள்ளது.

அலவ்வயில் இருந்து நாரம்மலை நோக்கிப் பயணித்த பஸ்ஸே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது 51 வயதான நபரே உயிரிழந்துள்ளார். காயமடைந்தவர்களில் 7 பேர் குருநாகல் வைத்தியசாலையிலும், 11 பேர் நாரம்மல வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## விஜயகலா விடுதலை...

யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் மக்கள் சேவைத் திட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் எழ வேண்டும் என சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார் எனவும், அக்கருத்தானது அரசமைப்பின் 06ஆவது பிரிவின் திருத்தம், 1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றமாகும் எனவும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவு கொழும்பு பிரதான நீதிவான் நீதி நீதிமன்றில் முதல் அறிக்கை தாக்கல் செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தனது சமர்ப்பணத்தில், விஜயகலா மகேஸ்வரன் ஜனாதிபதியின் மக்கள் சேவைத் திட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சியில் அரச அமைச்சர்கள் பலர் கலந்துகொண்ட நிகழ்வில் உரையாற்றுகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாகப் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள் குறித்து அவர் அச்சத்தையும் ஆத்திரத்தையும் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டுப் பேசினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற துஷ்பிரயோகங்கள் இடம்பெறவில்லை. அப்படி நடைபெற்றால் அதற்கான தண்டனைகள் பாரதூரமாக இருந்தன. நாட்டின் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கபட வேண்டுமாயின் அத்தகைய நிர்வாகம் ஒன்றினை தற்போது நாம் ஏற்படுத்த வேண்டும் என்று கருத்தியதாகவே அவரது கருத்து அமைந்திருந்ததேயன்றி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் உரையாற்றவில்லை என்ற சமர்ப்பணத்தையடுத்து 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி விஜயகலா மகேஸ்வரனை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது.

இன்று (19) வழக்கு நீதிமன்றில் மேலதிக விசாரணைக்காக அழைக்கப்பட்ட போது குற்றப் புலனாய்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நீதிமன்றில் தமது சமர்ப்பணத்தில் 1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழோ விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்ய உத்தேசிக்கவில்லையென சட்டமா அதிபர் திணைக்களம் தங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது என்று பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதையடுத்து விஜயகலா மகேஸ்வரன் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, விஜயகலா மகேஸ்வரனை விடுதலை செய்யுமாறு நீதிமன்றைக் கேட்டுக் கொண்டதையடுத்து அவர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி காமினி திஸாநாயக்க, ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா ஆகியோர் இந்த வழக்கில் ஆஜராகினர்.

## கல்முனை பொதுச்சந்தை...

வழமைபோன்று சந்தையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் வர்த்தக சங்க செயலாளர் ஏ.எல் கபீர் தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கில் நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு 8 தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது தொடர்பில் எமக்குத் தெரியாது. எம்மை யாரும் இதுவரை தொடர்பு கொள்ளவில்லை. இவ்விடயம் தொடர்பில் எந்தத் தரப்பும் எம்மைத் தொடர்பு கொண்டு கலந்துரையாடவில்லை. எதற்காகக் ஹர்த்தால் செய்கின்றார்கள் என்பது கூட எமக்குத் தெரியாது. ஆனால், தற்போது கூட ஹர்த்தால் தொடர்பில் ஆதரவு கேட்டால் அதன் நோக்கம் பற்றி உரிய தரப்பிடம் கேட்போம். எனினும், எமது சந்தை வழமை போன்று நாளை (20) இயங்கும்." – என்றார்.

## நாடாளுமன்றில்...

நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும நாடாளுமன்றத்தின் மத்திய பகுதிக்குச் சென்று அமைதியின்மையை ஏற்படுத்தியிருந்தார்.

இதையடுத்து ஆளும்–எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கடும் வாய்த்தர்க்கத்தால் சபை அமர்வு 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கருத்துரைத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, "செங்கோலுக்கு அவமரியாதை ஏற்படும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும செயற்பட்டுள்ளார். அவ்வாறான செயற்பாட்டைக் கண்டித்து அவருக்கு இன்று முதல் 4 வாரங்களுக்கு சபை அமர்வில் பங்கேற்கத் தடை விதிக்கப்படுகின்றது." – என்றார்.

# அரசுக்கு எதிராக யாழில் கையெழுத்துப் போராட்டம்








# யாழ். பஸ் நிலையத்தில் பிறந்தநாள் கொண்டாடியோரில் மேலும் ஐவர் கைது!

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் பொது மக்களுக்கு இடையூறு விளை வித்து, அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாகப் பிறந்த நாள் கொண்டாடிய கும்பலை சேர்ந்த மேலும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு 50 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கி ளில் வந்த 150 இற்கும் மேற்பட்ட இளை ஞர்கள் அண்மையில் ஒன்று கூடி தங்களில் ஒருவரின் பிறந்த நாளைக் கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர். அதனை டிக்டொக் போன்ற சமூக வலைத் தளங்களில் பகிர்ந்தும் உள்ளனர்.



பிறந்தநாள் கொண்டாடிய இளை ஞர்களின் செயற்பாடானது வீதியில் சென்ற மற்றும் பேருந்து நிலையத்தில் இருந்தவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக இருந்தது என்று யாழ்ப்பாண பொலிஸாருக்கு தொலை பேசி ஊடாக அறிவிக்கப்பட்ட போதிலும் பொலிஸார் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை.

யாழ். நகர் மத்தியில் சன நெருக் கடியான நேரத்தில் சட்டவிரோதமான முறையில் ஒன்று கூடி பிறந்தநாள் கொண்டாடியுள்ளார்கள் அது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்காதமை தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்து இருந்தனர். இந்த நிலையில் விசார ணைகளை முன்னெடுத்த பொலி ஸார் இருவரை கைது செய்து கடந்த சனிக்கிழமை நீதி வான் முன்னிலையில் முற்படுத்தி இருந் தனர்.

அவர்களை 14 நாட்களுக்கு விளக்கம றியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் , சம்பவத்துடன் தொடர்புடைய பிறந்தநாள் காரர் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்ய உத்தரவிட்டார்.

இந்த நிலையில் மேலும் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



# சேவை நலன் பாராட்டு

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று தேசிய பாடசாலை யில் கடந்த ஆறு வருடங்களாக சேவை யாற்றி கல்முனை ஸாஹிறா கல்லூ ரிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் வணிகத்துறை ஆசிரியர் ஏ.அப்துல் அஸீஸின் சேவையைப் பாராட்டி சேவை நலன் பாராட்டு மற்றும் பிரியாவிடை நிகழ்வு என்பன இன்று (19) அக்கரைப் பற்று தேசிய பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றன.

அதிபர் ஏ.எச். பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது ஆசிரியர் அஸீஸிற்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

# ‘ஸ்ரீலங்கா பெண் கிளப்’ இன் மூன்றாவது தேசிய மாநாடு

(எஸ்.அஷ்ரப்கான்,எம்.எஸ். எம்.ஸாகிர்)

ஆற்றலுள்ள பெண்களின் அமைப் பான ‘ஸ்ரீலங்கா பெண் கிளப்’ இன் மூன்றாவது தேசிய மாநாடு நாளை மறுதினம் (21) சனிக்கிழமை “குடும்பம் எங்கள் விழி ஆற்றல் எங்கள் வழி” எனும் தொனிப்பொருளில் காத்தான்குடி சி.ஐ.ஜீ. மண்டபத்தில் அமைப்பின் ஸ்தாபகத் தலைவி சம்மாந்துறை மஷ்ஹூறா தலைமையில் இடம்பெற வுள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலுமி ருந்து அறுபது பெண் எழுத்தாளர்கள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் கலந்து கொள்வார்.

முதன்மை விருந்தினராக பேரா தனை வளாக மெய்யியல்துறை ஓய்வு நிலைத் தலைவரும் பேராசிரியருமான எம். எஸ். எம். அனஸ் கலந்து கொள் வார்.

கல்விமான்கள், கலைஞர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், ஊடகவி யலாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ள இந்த மாநாடு மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

முதல் அமர்வு பெண்களுக்கு மட்டுமானது.

இரண்டாம் அமர்வில் 22 முஸ்லிம் பெண்களின் ஆங்கில மொழி பெயர்ப் புக் கவிதைகள் அடங்கிய “இமயம் தழுவும் இறக்கைகள்” கவிதைத் தொகுதி வெளியிட்டு வைக்கப்பட வுள்ளது.கவிதை சிறுகதை மற்றும் ரமழான் மாதப் போட்டிகளில் வெற்றி யீட்டியோர்களுக்கான பரிசளிப்பும் நடைபெறவுள்ளது.

மூன்றாவது அமர்வில் ஸ்ரீலங்கா பெண் கிளப் அமைப்பின் சிறந்த நிகழ்ச் சித் தயாரிப்பாளர்கள், நெறியாளர்கள், விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட வுள்ளனர் என்று அமைப்பின் ஸ்தாபகத் தலைவி சம்மாந்துறை மஷ்ஹூறா தெரிவித் தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## யார் பொலிஸ்மா அதிபர்?

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு பொலிஸாருடையது. சட்டத்தின் ஆட்சி நாட்டில் நிலவுகின்றதை உறுதிப்படுத்தும் பிரதான கருவி பொலிஸ் துறைதான்.

அந்தப் பொலிஸ் துறையின் செயற்பாடு குறித்து நாட்டில் அரசமைப்பு ரீதியான பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

இது தொடர்பில் நாட்டின் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கும் அரசமைப்பு ரீதியான வியாக்கியானத்தை சட்டத் தரப்புகள் ஏற்றுக் கொள்ளவில்லை. நாட்டுக்கு சட்டரீதியாக ஒரு பொலிஸ்மா அதிபர் இல்லை என்ற குழப்ப நிலையே நீடிப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

தற்போதைய அரசமைப்பு மற்றும் சட்ட ஏற்பாடுகளின் படி பொலிஸ்மா அதிபர் போன்ற பதவிக்கு நியமிக்கப்படுபவரை ஜனாதிபதி பரிந்துரைப்பார். அதை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரிக்கும். அந்த அங்கீகாரத்துடன் ஜனாதிபதி அந்த நியமனத்தை வழங்குவார். அதுதான் நடைமுறையும், சட்ட ஏற்பாடும் கூட.

இதுவரையில் பதவியில் இருந்த பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் பதவிக்காலம் ஆறு மாதங்களுக்கு முன்னரே முடிவடைந்து விட்டது. அவரது பதவிக் காலத்தை ஜனாதிபதி மூன்று, மூன்று மாதங்களாக இரண்டு தடவைகள் நீடிக்கப் பரிந்துரைத்தார். அந்தப் பரிந்துரைகளை அரசமைப்புக் கவுன்ஸில் ஏற்று அங்கீகரித்தது. அவ்வாறு இரண்டு பதவி நீடிப்புகளுக்கு மேல் நீடிப்பு வழங்க அரசமைப்பு கவுன்ஸில் அனுமதி வழங்காது என்பதையும், இரண்டாவது பதவி நீடிப்பையொட்டிய தனது தீர்மானத்தில் அரசமைப்புக் கவுன்ஸில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

இந்தச் சமயத்தில்தான் இரண்டு பதவி நீடிப்புகளின் பின்னரும், மேலும் மூன்று வார கால பதவி நீடிப்பை வழங்கும் மூன்றாவது நியமனக் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்த - இருக்கின்ற(?) - பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு வழங்கியிருக்கின்றார்.

வழமையாக இத்தகைய பதவி நியமனங்கள், பதவி நீடிப்புகளுக்கு அரசமைப்புக் கவுன்ஸிலின் அங்கீகாரத்துக்கான பரிந்துரைக் கடிதங்களை அனுப்பும் ஜனாதிபதி, இம்முறை 3 வார கால நீடிப்பு வழங்கும் கடிதத்தை அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு அனுப்பவும் இல்லை, அவரது பதவி நீடிப்புக்கு அரசமைப்புக் கவுன்ஸில் அனுமதி வழங்கவும் இல்லை.

அதன்படி, ஒக்டோபர் 9 ஆம் திகதியுடன் இதுவரை பதவியில் இருந்த பொலிஸ்மா அதிபரின் சேவைக் காலம் முடிவடைந்துவிட்டது. நாட்டில் ஒரு பொலிஸ்மா அதிபர் இல்லை என்று எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன.

அரசமைப்பு ரீதியாக - சட்டரீதியாக - அந்த நிலைப்பாட்டில் அர்த்தங்கள் உண்டு. நாடு பொலிஸ்மா அதிபர் விவகாரத்தில் ஒரு குழப்பத்தில் மூழ்கியுள்ளது என்பதும் உண்மை.





## அக்கரைப்பற்றில் இரத்ததானம்!

(கே. எ. ஹமீட், எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில், தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் அலுவலகம் ஏற்பாடு செய்த மாபெரும் இரத்ததான முகாம் நேற்றுப் புதன்கிழமை (18) முகாமையாளர் யூ.கே.எம்.முஸாஜித் தலைமையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இப்பிராந்திய ஏனைய அரச நிறுவனங்களுக்கு முன் மாதிரியாக இரத்தானத்தை வழங்கியுள்ளனர்.

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.ஏ.காதர், நீர் வழங்கல் சபையின் அம்பாறை மாவட்ட உதவிப் பொது முகாமையாளர் வீ.விநோதன், இப்பிராந்திய நடமாடும் இரத்தான ஒருங்கிணைப்பாளர் ஏ.எச்.எம்.சிபாஸ், நீர்வழங்கல் சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## பொத்துவில் தேர்தல் தொகுதிக்கு இணை அமைப்பாளர் நியமனம்!



(வி.ரி. சகாதேவராஜா)

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் தொகுதி இணை அமைப்பாளராக புதிய வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த கட்சி முக்கியஸ்தர் வெள்ளையன் வினோகாந்த் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசா நேற்று முன்தினம் வழங்கி வைத்தார்.

பொத்துவில் தொகுதியில் உள்ள திருக்கோவில், ஆலையடிவேம்பு, காரைதீவு ஆகிய தமிழ் பிரதேச செயலகங்களின் ஒட்டு மொத்த கட்சியின் பணிக்காக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏலவே அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த், கட்சியின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களுக்கான அமைப்பாளராகவும், தலைவரின் சிங்கள – தமிழ் மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.



# முல்லையில் தொழில் முனைவோருக்கு ஐந்து நாள்கள் வதிவிட பயிற்சித் திட்டம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் இளம் தொழில் முனைவோருக்கான ஐந்து நாள் வதிவிட பயிற்சி நெறி ஒன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம் பெற்று வருகிறது.

இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் கீழ் இயங்கி வரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடளாவிய ரீதியில் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு இந்தப் பயிற்சி நெறிகளை முன்னெடுத்து வருகிறது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் புரியும் – தொழில் முயற்சிகளை புதிதாக ஆரம்பிக்க ஆர்வமுள்ள இளைஞர்கள் 35 பேரை தெரிவு செய்து அவர்களுக்கு வியாபார திட்டம் தயாரித்தல் உள்ளிட்ட பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகிறது.

தங்களது சுய தொழில்களை முன்னேற்றித் தங்களது பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய சுமார் 35 இளைஞர் யுவதிகள் இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றியுள்ளனர்.

பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமை அலுவலக விவசாய தொழில் முயற்சி பிரிவின் பிரதிப் பணிப்பாளர் குமுதினி ராஜபக்ஷ மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினுடைய வடமாகாண உதவி பணிப்பாளர் கே. டி. சி காமினி, முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவி பணிப்பாளர் நா. குகேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.



# விபுலானந்தா சனசமூக நிலையத்தில் நவராத்திரி!

**( வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு விளையாட்டு கழகம் மற்றும் விபுலானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்த நவராத்திரி விழா கழக உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கழகத்தலைவர் தம்பி ராஜா தவக்குமார் தலைமையில் இந்த நவராத்திரி விழா நடைபெற்று வருகிறது. இறுதி நாள் நிகழ்வில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு அருகிலுள்ள நீரேரியில் நீர் வெட்டு மற்றும் கும்பம் சரித்தல் இடம்பெறும்.





# துருக்கி தூதுவருடன் மன்சூர் சந்திப்பு!

(ஏ.எஸ்.மௌலானா)

துருக்கியின் இலங்கைக்கான தூதுவர் டமெட் ஷெகர்ஜியளுவை கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு செவ்வாயன்று (17) கொழும்பிலுள்ள துருக்கி தூதரகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பொருளாதார நெருக்கடியால் நாட்டில் நிலவும் பிரச்சினைகள், விஷேட தேவையுடையோர், குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள், வறிய பாடசாலை மாணவர்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள் மற்றும் கணவனை இழந்த விதவைகளுக்கான வாழ்வாதார உதவிகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இவற்றை நிவர்த்தி செய்வதற்கு உதவுமாறு கோரி மகஜர் ஒன்றையும் துருக்கி தூதுவரிடம் அவர் கையளித்தார்.

இவைகளை கவனத்தில்கொண்டு துருக்கி மக்கள் சார்பில் விரைவாக உதவிகளை பெற்றுத் தருவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாக தூதுவர் உறுதியளித்துள்ளார்.

மேலும், இச்சந்திப்பின்போது இருதரப்பு மற்றும் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன என்று முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் தெரிவிதுள்ளார்.







# வறுமை ஒழிப்பு வாரத்தின் நிகழ்வுகள் முல்லைத்தீவில்

சர்வதேச வறுமை ஒழிப்பு வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நேற்று (18) இடம்பெற்றன.

சர்வதேச வறுமை ஒழிப்பு வாரம் ஒக்ரோபர் 17 முதல் 23 வரை கடைபிடிக்கப்படவுள்ளது.

இந்த நிலைமையில் பல்வேறு திணைக்களங்களாலும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சர்வதேச வறுமை ஒழிப்பு வாரத்தின் மாவட்ட ரீதியான ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட பணிப்பாளர் முபாரக், ஒட்டுசுட்டான் உதவிப் பிரதேச செயலாளர் றமேஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட மூன்று பயனாளிகளுக்கு புதிய வீடமைப்பு கொடுப்பனவு தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. மூன்று வீட்டு லொத்தர் பயனாளிகளுக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

நான்கு மாணவர்களுக்கு சிறுவர் சேமிப்பு வேலை திட்டத்துக்கான பரிசில்களும், மூன்று பயனாளிகளுக்கு கடனும் மேலும் நான்கு மாணவர்களுக்கு சிசுபல அப்பியாச கொப்பிகளும் வழங்கப்பட்டன.

பிரதேச செயலகத்தால் சில நன்கொடையாளர்கள் ஊடாக பெறப்பட்டு பத்து பயனாளர்களுக்கு தலா பத்து கிலோ அரிசியும் வழங்கப்பட்டது.





# குழந்தைகளைச் சரியான வழிக்கு அனுப்ப முன்பள்ளிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன

## வடமேற்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு

(ரஸீன் ரஸ்மின்)

குழந்தைகளை சரியான பாதைக்கு கொண்டு செல்வதில் பாலர் பாடசாலை முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டுக்கு நல்ல எதிர்கால குடிமகனை உருவாக்க குழந்தைகளின் மனம் நன்றாக இருக்க வேண்டும்.

வடமேற்கு மாகாண ஆளுநர் லக்ஷ் மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்

வடமேல் மாகாண முன்பள்ளி ஆசி ரியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப் பனவு வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே ஆளுநர் மேற் கண்ட வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு குருநாகல் கூட்டுறவு கிராமிய வங்கி சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கால்நடை இரா ஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத், நாடா ளுமன்ற உறுப்பினர் மஞ்சுள திஸா நாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற் றும் போது -

தற்போது பாலர் பாடசாலைகளில் கற்பித்துக் கொடுக்கும் ஆசிரியர்க



ளுக்குச் சில கொடுப்பனவுகளை வழங் குவது தொடர்பாக அதற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சரவை பத்திரத்தை தயாரித்து வருகின்றார்.

அது எதிர்காலத்தில் இந்நாட்டின் முன்பள்ளி துறைக்கு இது நல்லதொரு விடயமாக அமையும்.

குழந்தைகளை சரியான பாதைக்கு கொண்டு செல்வதில் பாலர் பாடசாலை முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டுக்கு நல்ல எதிர்கால குடிமகனை உருவாக்க குழந்தைகளின் மனம் நன்றாக இருக்க வேண்டும்.

ஒருசில பெற்றோர்கள் தங்கள் பிள் ளைகளை வீட்டில் மிகவும் கொடூரமாக நடத்துகின்றனர். இதனால் குழந்தைக ளின் இயல்பு நிலை கொடூர மனோ நிலை மாற்றத்துக்கு உள்ளாகிறது.

இந்த மனநிலையுடன் வீட்டில் இருந்துவரும் குழந்தையை ஆசிரி யர்கள் நல்ல முறையில் எப்படி தயார் படுத்துவது. காரணம், பாலர் பாடசா லைக்கு வரும் குழந்தைகள் மிகக் குறு கிய நேரமே ஆசிரியருடன் இருக் கின்றனர்.

எனவே, நல்ல குழந்தையை உருவாக்குவதில் பெற்றோருக்கும் பெரும் பங்கு உள்ளது என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.- என்றார்.

# இஸ்ரேலின் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்

## தௌபீக் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு

(எஸ். சினீஸ்கான்)

பலஸ்தீனுக்கு எதிராக இஸ்ரேல் நடத்தும் மனிதாபிமானமற்ற தாக் குதலை எல்லா நாடுகளும் இணைந்து கண்டிக்க வேண்டும். கடந்த பத்து நாள்களாக இரக்கமற்ற முறையில் தாக்குதல் நடத்துவதை வன்மையாக கண்டிக்கிறோம்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை (18) நாடா ளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்-



பலஸ்தீன் மக்களுக்கு அடிப்படை வசதிகள் கூட வழங்கப்படாமல் மின் சாரம், நீர் வசதிகளை நிறுத்தி தாக்குதல் நடத்துகிறார்கள். மிக அண்மையில் வைத்திய சாலையில் கூட மிகக் கொடூரமாகத் தாக்குதல் நடத்தி சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன.

உலக நாடுகள் அனைத்தும் மனி தாபிமானம், சாமாதானம் தொடர்பில் பேசுகிறோம். எத்தனையோ மாநாடுகள் நடத்துகிறோம். அவ்வாறிருந்தும் இந்த இரக்கமற்ற தாக்குதல்கள் தொடர்பில் எந்த நாடுகளும் பேசாமல், யுத்தத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்காமல் மௌனமாக இருக்கிறார்கள். முஸ்லிம் நாடுகள் கூட அறிக்கைகள் மாத்திரம் விட்டுக்கொண்டிருக்கின்றன.-என் றார்.



# ஆத்துப்பிலவு கிராமத்தில் இருந்து பல்கலை செல்வோர் கௌரவிப்பு

புதுக்குடியிருப்பு ஆத்துப்பிலவு கிராமத்தில் இருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்ற இடம்பெற்றது.

மண்ணின் மரபையும் பண்பாட்டையும் பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் ஆத்துப்பிலவு கிராம மக்களின் ஏற்பாட்டில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆத்துப்பிலவு கிராமத்திலிருந்து க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் தெரிவாகிய மாணவர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

ஆதிபராசக்தி முன்பள்ளியில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.

உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் தெரிவாகிய 5 மாணவர்களும், சித்தியடைந்த 3மாணவர்களும் புலம்பெயர் வாழ் உறவான ராஜ்ஜின் நிதிப்பங்களிப்பில்கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு உதவி பிரதேச செயலாளர் செல்வி மரியாம் பிள்ளை சர்மினி, கிராம சேவையாளர் தமிழ்செல்வன் , முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், வி.பி.பவுண்டேசனின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன், பொதுமக்கள் பெற்றோர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி





**(அ.அஸ்வர்)**

கிளிநொச்சியில் வட மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள் அமைச்சால் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள் நேற்று (18) புதன்கிழமை வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டங்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தில், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் சு.ஜெயனந்தராசா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட உதவிச் செயலாளர் ஹ.சத்தியஜீவிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த ஏழு பெண் தலைமைத்துவ குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த ஆறு பயனாளிகளுக்கும், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தலா ஒவ்வொரு பயனாளிகளுக்குமாக மொத்தமாக 15 பயனாளிகளுக்கு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் தையல், சிறுகைத் தொழில், உணவுப் பொருள் உற்பத்தி, தோட்டம், சிறுகடை, கோழி வளர்ப்பு ஆகிய வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் உத்தியோகத்தர்கள், வட மாகாண சமூகசேவைத் திணக்கள உத்தியோகத் தர்கள், பயனாளிகள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# மரக்கன்றுகள் நடல்

(த.சுபேசன்)

விஜயனின் ஒரு கோடி தாவரங்கள் நடும் திட்டத்தின் ஓர் அங்கமாக நவராத்திரி ஆரம்ப நாளில் கொடிகாமம் ஐயனார் கோவில் அருகாமையில் ஒரு தொகுதி மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன.

புலம்பெயர் நாட்டில் வசிக்கும் வைத்தியர் சிவகுமாரி சிதம்பரப்பிள்ளையின் நிதிப் பங்களிப்பில் இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமய தொண்டர் சபை ஊடாக மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

மரக்கன்றுகள் நட்டு வைக்கும் நிகழ்வில் கொடிகாமம் ஐயனார் ஆலய பூசகர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், முதலுதவிச் சங்க உறுப்பினர்கள் மற்றும் கொடிகாமப் பொலிஸார் கலந்து கொண்டனர்.



# தேர்தல் விழிப்புணர்வு கலந்துரையாடல்

(ஹஸ்பர்)

பப்ரல் அமைப்பு ஏற்பாடு செய்த தேர்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் திருகோணமலை மல்லிகா தனியார் விடுதியில் நேற்று புதன்கிழமை (18) நடைபெற்றது.

இந்த நிகழ்வு மாவட்ட சமூக பணியில் உள்ளவர்களுக்கு பப்ரல் அமைப்பின் தெளிவுபடுத்த நிகழ்வாக அமைந்தது.

பப்ரல் அமைப்பின் தேசிய இணைப்பாளர் சுஜீவகயானத் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

மார்ச் 12 இயக்கத்தை வலுப்படுத்துவதற்கான மாவட்ட வலையமைப்பு தகவல் திரட்டல் மற்றும் நாட்டின் தற்போதைய நிலையில் மக்கள் மத்தியில் தேர்தல் தொடர்பான முறை, வாக்குரிமை தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

நாட்டின் தேர்தல் நடைபெறும் போது மக்களின் வாக்குரிமை பற்றிய நிலையான கொள்கை கொண்டு வர வேண்டும். தேர்தல் ஆணைக்குழு தேர்தல் நடத்தப்பட வேண்டும் . ஆனால் நாட்டின் தேர்தல் நடைபெற பணம் இல்லை என்ற நிலை காணப்படுகிறது .

ஆகவே நாம் நாட்டின் தேர்தல் தொகுதியில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்ற தகவல்கள் பரிமாற்றப்பட்டன.

# பொதுமக்கள் பார்வைக்கு தென்கிழக்குப் பல்கலை!

(அஸ்ஹர் ஆதம்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பொது மக்கள் பார்வைக்காகத் திறந்து விடப்படவுள்ளது.

மறைந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் பிறந்த தினத்தை முன்னிட்டும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் தினத்தை முன்னிட்டும் எதிர்வரும் 24 மற்றும் 25ஆம் திகதி ஆகிய இரு தினங்களில் தென்கிழக்கு பல்கலைக் கழகம் பொது மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப் படவுள்ளது.

அன்றையதினம் சகல பீடங்களிலும் கல்விசார் நடவடிக்கைகள் மற்றும் கண்காட்சிகள் , பிரதான நூலகம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகப் பல்வேறுபட்ட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தைப் பொது மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்படும் நிகழ்வானது முதல் தடவையாகும் .

# ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்புக் கோரி திருமலையில் துண்டுப் பிரசுரம்!

(அப்துல்சலாம் யாசீம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக் கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கோரி திருகோணமலையில் துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

தமிழ் தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தலைமையில் நேற்று (18) விநியோகிக்கப்பட்டது.

நாளை 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ் டிக்கப்படவுள்ளது.







# ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி வவுனியாவிலும் துண்டுப்பிரசுரம்

(மன்னார் நிருபர்)

நாளை வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டம் தொடர்பாக தமிழ்த் தேசியனக் கட்சிகளின் கூட்டமைப்பால் வவுனியா நகரில் துண்டு பிரசுரங்கள் நேற்று வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா மீதான அச்சுறுத்தலின் மூலம் நீதித்துறை சுயாதீனமாக செயற்பட முடியாத நிலமை, வடக்கு - கிழக்கில் பொத்த மயமாக்கல், தமிழர் பிரச்சினைக்கு உள்நாட்டில் நீதியைக் காண முடியாது போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடங்கி நாளை வெள்ளிக்கிழமை ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.



துண்டு பிரசுர விநியோகத்தின் போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நகரசபைத் தலைவர் இ.கௌதமன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் என பலரும் கலந்து கொண்டனர்.

## கல்முனை மாநகர 'பட்ஜெட்'டுக்கு முன்மொழிவுகள் கோரப்பட்டன!

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்குப் பொது மக்களிடம் இருந்து ஆக்கபூர்வமான முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார்.

பொது மக்கள் எவராயினும் தமது முன்மொழிவுகளை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னதாக எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும் எனவும் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான மக்களை நோக்கிய பட்ஜெட்டை தயாரிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மக்களதும் பொது அமைப்புகளதும் ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை உள்வாங்கி சிறந்ததொரு சாத்தியப்பாடான பட்ஜெட்டை தயாரித்து, மாநகர சபையை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கத்திலேயே இவ்வாறு முன்மொழிவுகள் கோரப்படுகின்றன என்று ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## வவுனியா பஸ் நிலையத்தில் சடலம் மீட்பு!

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அடையாளம் காணப்படாத முதியவர் ஒருவரின் சடலம் ஒன்று இன்று (19) மீட்கப்பட்டுள்ளது.

அதிகாலை புதிய பேருந்து நிலைய பயணிகள் இருக்கையில் அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் உள்ளமை தொடர்பாக பொது மக்களால் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார் சடலத்தை மீட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# 150 கடலட்டைகளை மாத்திரம் தொழிலாளர் பிடிக்க வேண்டும்!

## கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் செயலாளரது அறிவிப்பால் திணறும் கடற்றொழிலாளர்கள்



**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் உள்ள அட்டை தொழில் ஈடுபடும் மீனவர்கள் ஒரு முறை தொழிலுக்கு சென்றால் 150 அட்டைகளை மாத்திரமே எண்ணிப் பிடிக்க வேண்டும்.

இவ்வாறு புதிய விசித்திரமான சட்டம் ஒன்றை மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்துக்குக் கடிதம் மூலம் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் செயலாளர் நாயகம் கஹவத்த அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பால் தொழிலாளர்கள் செய்வது அறியாது உள்ளனர்.

நாடளாவிய ரீதியில் அரசும் கடற்றொழில் அமைச்சு அட்டை வளர்ப்பு, அட்டை ஏற்றுமதி, அட்டை பிடி, உட்பட அட்டை உற்பத்தியுடன் தொடர்பு பட்ட மீனவர்களுக்கு பல்வேறு சலுகைகள், மானியங்களை வழங்கி வருகின்றது. இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் புதிய சட்டத்தை நடை முறைப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மன்னார் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்துக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அட்டை பிடி அனுமதியை முன்னதாகவே பெற்ற அனைவரது அனுமதி பத்திரத்தையும் இரத்து செய்யுமாறும் தன்னால் அனுப்பப்பட்ட புதிய நிபந்தனைகளின் அடிப்படையில் அனைவருக்கு மீள் அனுமதி பத்திரம் வழங்குமாறு பணித்துள்ளார்.

கடிதம் வெறுமனே இலங்கை கடற்படை தலைமையகம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்படை தலைமையகத்துக்கு மாத்திரமே பிரதியிடப்பட்டுள்ள நிலையில் மீனவர்கள் பல்வேறு ஆதங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

புதிய சட்டம் கடற்றொழில் நீரியல் வள அமைச்சருக்கு கூட தெரியாத நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில் இது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வைத் தொடர்பு கொண்டு வினவிய போது இந்த கடிதத்தில் உண்மைத் தன்மை இல்லை என்றும் இவை சில ஊடகங்களால் திட்டமிடப்பட்டு பரப்பப்படும் பிரசாரம் எனவும் இது தொடர்பில் தான் பரிசீலிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்த நிலையில் மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் நேற்று முன்தினம் புதிய நிபந்தனைகளின் அடிப்படையில் அனைவரும் செயல்படும் முகமாக புதிய அனுமதி பத்திரங்களை பெறுமாறு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் நேற்று (18) சௌத்பார் பகுதியில் அட்டை பிடிப்பதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதி பத்திரத்துடன் சென்றவர்களுக்கு கடற்படை பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளனர் என்று மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.


# நோர்வூட் ஒட்டரி பிரிவில் அமையவுள்ள மதுபானசாலைக்கு மக்கள் எதிர்ப்பு!

**(மஸ்கெலியா நிருபர்)**

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியான டிக்கோயா சலங்கந்தை ஒட்டரி பிரிவில் புதிதாக அமைய இருக்கும் மதுபானசாலை வேண்டாம் எனக் கோரி அப் பகுதியில் உள்ள மத குரு மார்கள், இளைஞர்கள், கிராம மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் ஊர்வலம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டகாரர்கள் நுவரெலியா மாவட்டத்தில் இனியும் மதுபான சாலைகள் வேண்டாம் எனவும், தற்போது உள்ள அனைத்து மதுபான சாலைகளையும் அகற்ற வேண்டும் மது அற்ற மலையகம் என்று உறுவாக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர்.

# செம்புவத்த ஏரி...



# மறைக்கப்பட்டதா? அல்லது மறக்கப்பட்டதா?

இலங்கையானது இயற்கை வளங்களால் அழகு பெற்று சுற்றுலா துறைக்கு ஏற்ற இடங்களில் ஒன்றாக முதன்மை பெறுகின்றது என்றே கூறலாம். இங்கு காணப்படும் இயற்கை வளங்களால் நிறைந்த சுற்றுலாத் தளங்கள் சில மானிட செல்வாக்கால் மாற்றங்களுக்கு உட்பட்டு பிரசித்தி பெற்ற சுற்றுலா தளங்களாக வளர்ச்சி அடைந்துள்ளன. அத்தகையதாக பல சுற்றுலா தளங்கள் பிரபல்யம் அடைந்திருந்தாலும் அவற்றின் சில இடங்கள் பிரசித்தமடையாத நிலையிலும் உள்நாட்டு மக்களிடத்தில் கூட அறியப்படாத நிலையிலுமே அதிகமாகக் காணப்படுகின்றன. சில வேளைகளில் உள்நாட்டுப் பகுதிகளில் மிகவும் சாதாரணமாக காட்சியளிக்க கூடிய இடங்கள் சுற்றுலா பயணிகளால் அதிகம் கவரப்படக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறாக இன்றளவில் மறைக்கப்பட்ட நிலையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு, தென் மற்றும் மலையகப் பகுதிகளில் அதிகமான இடங்கள் காணப்படுகின்றன. அதன் சாயலிலேயே மாத்தளை மாவட்டத்தில் காணப்படும் செம்புவத்த நீர்த்தேக்கமானது வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மத்தியில் பிரபல்யம் அடைந்ததாக காணப்பட்டாலும் உள்நாட்டு மக்கள் மத்தியில் இன்றும் அறியப்படாத நிலையிலேயே காணப்படுகிறது.

செம்புவத்த ஏரியானது இலங்கையின் மாத்தளை மாவட்டத்தில் எல்கடுவவில் அமைந்துள்ளது. இது காம்பெல்ஸ் வனப் பகுதியின் எல்லையாகவும் 1140 மீற்றர் உயரத்திலும் அமைந்துள்ளது. இயற்கை நீரூற்றிலிருந்து மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரியாகும். இதனைச் சுற்றி ஒரு இயற்கை நீச்சல் குளமும் அமைந்துள்ளது.

இந்த ஏரியானது ஒன்பது மீற்றர் (30 அடி) முதல் 12 மீற்றர் (39 அடி) வரை ஆழம் கொண்டது எனவும் நம்பப்படுகிறது. இப்பிரதேசத்தின் தேவதாரு மரங்கள் மற்றும் தேயிலையால் மூடப்பட்ட சரிவுகளுடன் கூடிய மூடுபனி மற்றும் குளிர்ச்சியான வளிமண்டலம் சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்துள்ளது எனலாம்.

இங்கு ஆண்டு வெப்பநிலை சுமார் 20 பாகை செல்சியஸ் ஆகவும் மழைப்பொழிவு சுமார் 2000 மில்லி மீற்றராகவும் காணப்படுகின்றது.

இந்தச் செம்புவத்தை ஏரி உருவானதற்கு ஒரு சிறிய வரலாறு ஒன்றும் உண்டு. அதாவது ஆங்கிலேயர்கள் இந்தப் பகுதியில் தேயிலை சாகுபடி தொடங்கி ஏரி இருக்கும் இடத்தில்தான் போலோ விளையாட்டு மைதானமாக பயன்படுத்தினர். 1949 ஆம் ஆண்டு அதன் அருகில் தேயிலை தொழிற்சாலை நிறுவப்பட்டது. அதன்பின் தொழிற்சாலைக்கு மின்சாரம் தயாரிக்க ஏரி கட்டப்பட்டது என கூறப்படுகின்றது.

இவ்வாறு கட்டப்பட்ட தொழிற்சாலை மறைந்து நீண்ட காலமான பின்னும் ஏரியின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மூலம் அப்பகுதியில் உள்ள வீடுகள் இன்றளவிலும் இயங்குகின்றன எனவும் கூறப்படுகிறது.

கோடைகால குடிசைகள், விருந்தினர் மாளிகை, நீச்சல் குளம் என 2005 ஆம் ஆண்டு சுற்றுலா தளமாக இந்த ஏரி உருவாக்கப்பட்டது. இது தற்போது எல்கடுவ தோட்டங்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றது. ராட்லி திசாஜ் அவர்களினாலேயே இந்த பாரிய மாற்றத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு ஏரி மற்றும் சுற்றுப்புறங்கள் புனரமைக்கப்பட்டன. அத்துடன் ஏரிக்கு அருகிலுள்ள நீரூற்றுக்களுடன் இவ் ஏரியை இணைத்தார்எனவும் கூறப்படுகின்றது.

செம்புவத்த நீர்த்தேக்கத்தின் இயற்கை அழகு மற்றும் காலநிலையைக் கண்டு பிரமித்து இலங்கைக்கு வரும் அரபு மொழி பேசும் சுற்றுலா பயணிகள் “ஜன்னதி துன்யா” அல்லது “பூமியின் ஒரு சொர்க்கம்” என்றும் சிறப்பித்து அழைத்தனர்.

இந்த ஏரிப்பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய ஜிப் லைனீங், கேனோயிங், படகு சவாரி, இயற்கை மலையேற்றம் மற்றும் பறவைகளை பார்ப்பது போன்றனவும் அமைக்கப்பட்டுள்ளன.

இதனோடு தேயிலைத் தோட்டங்களின் வழியாக பார்க்கச் செல்வதால் பல கோடை கால குடிசைகள் மற்றும் ஓய்வெடுக்கும் பகுதிகளும் தினசரி பார்வையாளர்களுக்காக அருகிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

உணவுகள் வசதியின்மையால் உணவுப்பொருளை கொண்டு வருவதற்கும் சமையல்காரர் மற்றும் சமையல் உபகரணங்கள் வசதியுடன் கபானாக்கள் மற்றும் முகாம் வசதிகளும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

சுற்றுலா பயணிகளுக்காக இவ்வாறான வசதிகள் மேம்படுத்திக் கொடுக்கப்பட்டாலும் இங்கு பல கட்டுப்பாடுகளும் விதிக் கப்பட்டுள்ளன. அதாவது 40 அடி வரை ஆழம் உள்ளதால் ஏரியில் குளிப்பதற்கும் நீந்துவதற்கும் அனுமதி இல்லை என்று உறுதிப்பாட்டுடன் கூறப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு இதனோடு நீச்சலுக்காக ஒரு இயற்கை நீரூற்றின் மூலம் ஒரு குளமும் காணப்படுகின்றது. இதில் சவாரி செய்வது முக்கிய பொழுதுபோக்கு சுற்றுலா பயணிகளால் கொள்ளப்படுகின்றது.

இளைய பயணிகளுக்காக தனி விளையாட்டுப் பகுதி மற்றும் வில்வித்தை வீச்சு போன்றனவும் இங்கு கிடைக்கப் பெறுகின்றன. பறவைகளைப் பார்க்கும் பாதைகள் மற்றும் மலை ஏற்றம் தொடர்பாக Epic Srilanka Holidays இல் ஏற்பாடு செய்து கொள்ளும் வசதிகளும் இங்கு உள்ளன.

இவ்வாறாக செம்பவத்த நீர் தேக்கமானது அன்றைய காலகட்டத்தில் இருந்ததை காட்டிலும் இன்று மென்மேலும் மாற்றங்களுக்கு உட்பட்டு சுற்றுலாத் தளமாகவே மாற்றமடைந்துள்ளது. இவ்வாறு இருந்தும் உள்நாட்டு மக்கள் மத்தியில் கூட அறியப்படாத சுற்றுலா தளமாகவே இது இன்றளவிலும் காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் உள்நாட்டு மக்கள் மத்தியில் பிரபல்யமடைய வைப்பதன் வாயிலாகவே வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் மத்தியிலும் இதனைப் பிரபல்யம் அடைய வைக்கக் கூடியதாக காணப்படும். இவ்வாறான விளம்பரப்படுத்தலால் சுற்றுலா துறையின் வருமான வீதம் அதிகரிப்பதுடன் இந்நீர் தேக்கத்தைச் சூழவுள்ள கிராமங்களும் வீதிகளும் அபிவிருத்தி அடைவதற்கான வாய்ப்புகளும் உண்டு.

மேலும் தனி மனித வருமான வீதங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் இங்கு ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

செம்பவத்த நீர் தேக்கமானது மர்மமாக மறைக்கப்பட வேண்டிய விடயம் அல்ல மாறாக அது பிரபல்யப்படுத்த வேண்டிய இடமே ஆகும்.

இதற்கு அரசாங்கமே உரிய செயற்பாடுகளை மேற்கொண்டு இந்த நீர்தேக்கத்தை உலகளாவிய ரீதியில் அடையாளப்படுத்த ஒரு வழிகோலாக அமைய வேண்டும்.

**பி. சமீதா,**
ஊடகத்துறை மாணவி,
யாழ். பல்கலைக் கழகம்.

# முள்ளிவாய்க்காலில் தமிழருக்கு நேர்ந்த கதியே இன்று காசாவில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கும்!

## மனதளவிலாவது தமிழ் மக்கள் துணை நிற்க வேண்டும் என்கிறார் ஐங்கரநேசன்

காசாப் பகுதியிலிருந்து ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொண்டு பெரும் எண்ணிக்கையிலான இறப்புகளுக்கு வழி வகுத்ததையடுத்து இஸ்ரேல் காசாவின் மீது கொடூரமான யுத்தமொன்றை ஆரம்பித்திருக்கிறது.

மக்கள் குடியிருப்புகள், மருத்துவமனைகள் என்று பாராது தடை செய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளை வீசி காசா முழுவதையுமே துடைத்தழிக்கும் நோக்கில் இஸ்ரேல் மூர்க்கத்தனமாகத் தாக்கி வருகிறது.

இந்த யுத்தம் ஹமாஸ் இயக்கத்தினரைச் சாட்டாக வைத்துப் பாலஸ்தீனர்களைக் கருவறுக்கும் இனவழிப்பு யுத்தம் ஆகும்.

இந்நேரத்தில், இலங்கையில் இன வழிப்புக்குத் தொடர்ச்சியாக முகங்கொடுத்து வரும் ஈழத்தமிழ் மக்கள் இனவழிப்புக்கு ஆளாகும் பாலஸ்தீனிய மக்களுடன் மனதளவிலாவது துணை நிற்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் நிகழ்த்திவரும் தாக்குதல் தொடர்பாக பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காசா நிலப்பரப்பை இஸ்ரேல் 1967ஆம் ஆண்டுபலவந்தமாக ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து அங்கு வாழும் பாலஸ்தீனர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாகப் பட்டுள்ளனர்.

காசா வெறும் 365 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. உலகின் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதியாக விளங்கும் இங்கு 20 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். இவர்களில் பாதிப்பேர் 18 வயதுக்குட்பட்ட இளய தலைமுறையினராவர்.

இலங்கை அரசு முள்ளிவாய்க்கால் என்னும் குறுகிய நிலப்பரப்பில் லட்சக்கணக்கான தமிழ் மக்களைத் திட்டமிட்டுச் சிக்கவைத்து அவர்களைக் கொத்துக் குண்டுகள் வீசி அழித்தொழித்ததைப் போன்றே, இன்று மிகக்குறுகிய காசா நிலத் துண்டில் பாலஸ்தீனர்களை இஸ்ரேல் கொன்று குவித்து வருகிறது.



தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் ஜனநாயக வழிமுறைகளிலிருந்து ஆயுதப் போராட்டமாகப் பரிணாமித்த போது தமிழ் விடுதலை இயக்கங்களில் பலர் பாலஸ்தீன விடுதலைப் போராளிகளிடம் இருந்து ஆயுதப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இதைத் தங்களின் பெருமையாகவும் வலிமையாகவும் சிலாகித்தவர்கள் இன்றும் எம்மத்தியில் உள்ளனர்.

பாலஸ்தீனர்களிடமிருந்து ஆயுதப் பயிற்சி பெற்றதை நாம் எவ்வாறு மறக்க இயலாதோ, அதே போன்று இஸ்ரேலின் மொசாட் உளவுப் பிரிவினரின் ஆலோசனையின் பேரில் தமிழ் மக்களை இலங்கை அரசு தாக்கி அழித்ததையும் நாம் மறந்து விடலாகாது. ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்காக நாம் குறைந்த பட்சம் தற்போது அனுதாபங்களையாவது வெளிப்படுத்தாதுவிடின் வரலாறு எம்மை ஒருபோதும் மன்னிக்காது.– என்றுள்ளது.

# கடுகதி ரயில் சேவையை மாங்குளத்திலும் பெறலாம்!

கடுகதி ரயில் சேவைகள் நாளை மறுதினம் 21 ஆம் திகதி தொடக்கம் மாங்குளம் ரயில் நிலையத்திலும் நிறுத்தப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளில் ஒன்றை நிறைவேற்றியது ரயில்வேத் திணைக்களம் .

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் ரயில் சேவைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் முறிகண்டி மற்றும் மாங்குளம் ஆகிய இரண்டு ரயில் நிலையங்கள் காணப்படுகின்றன.

இந்த இரண்டு ரயில் நிலையங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மக்களுக்கான ரயில் சேவைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய பிரதான ரயில் நிலையமாக மாங்குளம் காணப்படுகின்றது.

மாங்குளம் ஊடாகவே அதிக முல்லைத்தீவு மக்கள் தமக்கான சேவையை பெறக்கூடியதாக இருக்கிறது.

இருப்பினும் மாங்குளம் ரயில் நிலையத்தில் ஆசன முற்பதிவு வசதிகள் இல்லாமையால் கடுகதி ரயில் நிறுத்தாது சென்றுவந்தது.

இதனால் பொது மக்கள் மாத்திரமன்றி அரச அதிகாரிகளும் சேவையை பெற கிளிநொச்சி அல்லது வவுனியா ரயில் நிலையங்களுக்கே செல்லவேண்டிய நிலையில் இருந்தனர்.

இந்நிலையில் இந்த இரண்டு சேவைகளையும் வழங்குமாறு பல்வேறு தரப்பினராலும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் பலதடவைகள் அபிவிருத்தி குழு கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டு மாவட்ட செயலகத்தால் கொழும்பு ரயில் நிலைய தலைமைஅலுவலகத்துக்கும் ஜனாதிபதி செயலகத்துக்கும் இது தொடர்பான கோரிக்கைகள் அனுப்பப்பட்டிருந்தன.

மாங்குளம் ரயில்வே நிலைய அதிபர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களது முயற்சியால் நாளை மறுதினம் 21 ஆம் திகதி தொடக்கம் மாங்குளம் ரயில் நிலையத்தில் கடுகதி ரயில்கள் உட்பட்ட அனைத்து ரயில்களும் நிறுத்தப்படும் என்று ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நேர அட்டவணைப்படி ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 05.10 அணிக்குக் கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் 10.42 மணிக்கு மாங்குளத்தை வந் தடைந்து காங்கேசன்துறை நோக்கி புறப்படும்.

யாழ். நிலா வெள்ளிக்கிழமைகளில் இரவு 10 மணிக்கு புறப்பட்டு மாங்குளத்துக்கு அதிகாலை 4.20 க்கு வந்தடைந்து காங்கேசன்துறை நோக்கி புறப்படும்

காங்கேசன்துறையில் இருந்து ஞாயிற்றுக் கிழமைகளில் மதியம் 1.15 மணிக்குப் புறப்படும் குளிரூட்டிய கடுகதி ரயில் மாங்குளத்துக்குப் பிற்பகல் 2.54 மணிக்கு வந்தடைந்து கொழும்பை நோக்கி செல்லும்.

யாழ். நிலா ரயில் ஞாயிற்றுக்கிழமைகளில் காங்கேசன்துறையில் இருந்து இரவு 9.30 மணிக்குப் புறப்பட்டு மாங்குளத்துக்கு இரவு 11.20 மணிக்கு வந்தடைந்து கொழும்பு நோக்கி செல்லும்.

இதனைவிட ஏற்கனவே நிறுத்தப்பட்டுவந்த அனைத்து ரயிலும் வழமை போல் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் ஆசன ஒதுக்கீட்டு வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் .



# மக்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒல்லாந்தர் கால மரம் வெட்டப்பட்டது!

(பழுவூரான்)

ஒல்லாந்தர் மட்டக்களப்பில் தடம் பதித்த நாள்களில் நடப்பட்டதாகக் கூறப் படும் மரம் 400 வருடங்களுக்குப் பின்னர் தற்போது வெட்டப்பட்டுள்ளது.

மிகவும் பழமை வாய்ந்த பாரிய மரமே இவ்வாறு கடந்த திங்கட்கிழமை (16) அடியோடு வெட்டி அகற்றப்பட்டது .

அண்மைக் காலமாக இந்தப் பாரிய மரம் பல சர்ச்சைக்குள்ளாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

வின்சென்ட் மகளிர் பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள், அண்மையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்துக்கு வரும் நூற்றுக் கணக்கான மாணவர்கள் , அப்பிரதேசத்தில் கடமை புரியும் அரச ஊழியர்கள் மற்றும் பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு வரும் இஸ்லாமிய மக்கள் மத்தியில் மரம் பெரும் அச்சுறுத்தலாகக் காணப்பட்டது.

மட்டக்களப்பு வாழ் ஒட்டு மொத்த பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அரசின் அனுமதியோடு மரம் வெட்டி அகற்றப்பட்டது .

நீண்ட காலமாகப் பொது மக்கள் மரத்தை அகற்றுமாறு கோரிக்கை முன்வைத்த போதும் சிலரின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

குறிப்பிட்ட மரம் எந்த நேரத்திலும் விழக்கூடிய ஆபாயத்தில் உள்ளதை நேரில் பார்வையிட்ட பொறுப்பான அரச அதிகாரிகள் மரத்தை வெட்டி அகற்ற சிபாரிசு செய்தனர். இதன் பேரில் மாவட்ட அரச அதிபர் , மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளின் சட்ட பூர்வமான அனுமதியுடன் இலங்கை அரச மரக்கூட்டுத் தாபனத்தின் அனுசரணையுடன் மரம் பொது மக்கள் முன்னிலையில் அடியோடு வெட்டி வீழ்த்தப்பட்டது .

# கொக்கட்டிச்சோலையில் நடந்த வறுமை ஒழிப்பு வார நிகழ்வுகள்

(பழுவூரான்)

சர்வதேச சிறுவர் தினம் மற்றும் சர்வதேச வறுமை ஒழிப்பு வாரம் என்பவற்றை முன்னிட்டு மண்முனை தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பிரதேச செயலாளர் திருமதி தட்சணகௌரி தினேஸின் வழிகாட்டுதலின் கீழ் கொக்கட்டிச்சோலை சமுர்த்தி வங்கி வலய குளுவினமடு பிரிவில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதல் நிகழ்வாக கொல்லலுலை விவேகானந்தா வித்தியாலத்தில் போதைப் பொருள் தடுப்பு மற்றும் சிறுவர் சேமிப்பு தொடர்பான விழிப்புணர்வும் சத்திய பிரமாண நிகழ்வு நடைபெற்றது.

இரண்டாவது நிகழ்வாக சமுர்த்தி பயனாளிகளால் சிரமதானம் கிராம அலுவலகத்தில் இடம்பெற்றது.

குளுவினமடு மற்றும் கொல்லலுலை ஆகிய கிராம மட்ட அமைப்புக்களுக்கு வறுமை ஒழிப்பு, சமுர்த்தியின் புதிய பாதை, மற்றும் சேமிப்புக்கள் மூலம் வளமான எதிர்காலம் போன்ற விழிப்புணர்வு கூட்டங்களும் இடம்பெற்றன.

இந் நிகழ்வுகள் யாவும் கொக்கட்டிச்சோலை வங்கி வலய முகாமையாளர் மோசேஸ் புவிராஜ் தலைமையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.சிவராசாவின் ஏற்பாட்டில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.ருசகுமாரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் துஷாந்தன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், பிரதேச செயலக போதைத் தடுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. கே.மயூரி மற்றும் மாணவர்களின் பங்கேற்புடனும் நிகழ்வு நடைபெற்றது.





# அமெரிக்க ஜனாதிபதியை தொடர்ந்து பிரித்தானிய பிரதமர் இஸ்ரேலுக்கு விஜயம்




பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்குச் சென்றுள்ளார்.

காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலை அடுத்து, அங்கு இருதரப்பு மோதல் அதிகரித்து வருகிறது.

இஸ்ரேல் தரப்பில் 1,400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த சுமார் 200 பேர் ஹமாஸ் அமைப்பினரால் பணயக்கைதிகளாக பிடித்துச் செல்லப் பட்டுள்ளனர்.

இதையடுத்து, இஸ்ரேல் நடத்தி வரும் பதில் தாக்குதல் காரணமாக காசாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிரித்து வருகிறது. அங்கு இதுவரை 3 ஆயிரத்து 478 பேர் உயிரிழந்துள்ளனர். 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என காசா சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

ஹமாஸ்-ன் தாக்குதலை அடுத்து அமெரிக்காவும், பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்தன. அமெரிக்கா தனது போர்க்கப்பலை மத்திய தரைக்கடல் பகுதிக்கு அனுப்பியது. மேலும், அமெரிக்க வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்பு அமைச்சரும் இஸ்ரேலுக்குச் சென்றனர். இதன் தொடர்ச்சியாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், நேற்று இஸ்ரேல் சென்று அந்த நாட்டு பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்டோரைச் சந்தித்து அமெரிக்காவின் ஆதரவை நேரில் தெரிவித்தார்.

இந்த நிலையில், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், இஸ்ரேல் சென்றுள்ளார். தனது இஸ்ரேல் விஜயம் குறித்து சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், துக்கத்தில் உள்ள நாடான இஸ்ரேலில் நான் இருக்கிறேன். நான் உங்களுடன் வருந்துகிறேன். பயங்கரவாதம் என்ற தீமைக்கு எதிராக உங்களுடன் நிற்கிறேன் – இப்போதும் எப்போதும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரிஷி சுனக் அலுவலகம் வெளியிட்ட பதிவில், பிரதமர் ரிஷி சுனக் இஸ்ரேல் நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஜனாதிபதி இசாக் ஹெர்ஜோக் உள்ளிட்டோரை சந்திப்பார்.

இந்த மோதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தனது இரங்கலை தெரிவிப்பார். அப்பாவி மக்கள் கொல்லப்படுவது மிகப் பெரிய துயரம். ஹமாஸ் பயங்கரவாத அமைப்பின் கொடூர தாக்குதலை அடுத்து ஏராளமான அப்பாவி உயிர்கள் பலியாகி உள்ளன எனத் தெரிவித்துள்ளது.



# ஹமாஸ் அமைப்பின் பெண் தலைவர் பலி!

ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவின் முதல் பெண் தலைவர் ஜமிலா அப்துல்லா தாஹா அல் சான்டி கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் தகவல் தெரிவித்திருக்கிறது.

இஸ்ரேலுக்கு ஆதரவான நாடுகளின் தலைவர்கள் அந்த நாட்டுக்கு நேரில் சென்று இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். ஆனால் இஸ்ரேல் ஹமாஸைச் சேர்ந்த முக்கிய தலைவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவின் முதல் பெண் தலைவர் ஜமிலா அப்துல்லா தாஹா அல் சான்டி கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியான தகவலின்படி, ஜமிலா அப்துல்லா பாலஸ்தீன சட்ட சபையின் உறுப்பினர் ஆவார். அதுமட்டுமல்லாமல் ஹமாஸின் முக்கியத் தலைவரான அப்தெல் அஜிஸ் அல்-ரான்டிசியின் மனைவியும் ஆவார்.

ஹமாஸ் வானொலியை மேற்கோள் காட்டி இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதலை தடுத்துநிறுத்த வேண்டும்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தல்



தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், கடந்த 10 திகதி வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அவர்களது பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அத்துடன், ஓகஸ்ட் 20 ஆம் திகதி அதே வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.ஆறுகாட்டுத்துறைக்கு மிக அருகில் இந்திய கடல் எல்லைப் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வாள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களால் வெட்டியும், இரும்புக் கம்பி, கட்டை ஆகியவற்றால் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 11 மீனவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களிடம் இருந்து 800 கிலோ மீன்பிடி வலை, திசை காட்டும் கருவி, கையடக்க தொலைபேசிகள் உள்ளிட்ட பொருட்களை பறித்துச் சென்றுள்ளனர். இந்த தாக்கு தலில் காயமடைந்த 5 மீனவர்கள் மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டனர். மீனவர்களிடமிருந்து 10 லட்சம் ரூபா மதிப்புள்ள மீன்பிடி உபகரணங்களையும், மீன்களையும் கொள்ளையடித்துள்ளனர்.

அதன் பின்னர் கடந்த செப்டெம்பர் 23 மற்றும் 25 திகதிகளிலும் ஒக்டோபர் 6 ஆம் திகதியும் செருதூர் மற்றும் வெள்ளப் பள்ளம் மீனவர்களை கடல் கொள்ளையர்கள் தாக்கி அவர்களின் பொருட்களை கொள்ளையடித்து சென்றனர்.

மீண்டும் ஒக்டோபர் 17 ஆம் திகதி கோடியக்கரைக்கு தென்கிழக்கே பதினோரு நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இலங்கை கடற் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

அத்துடன், அதேநாள் மேலும் நான்கு மீனவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது ஒன்பது மீனவர்கள் தாக்கப்பட்டு படுகாயங்களுடன் நாகை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் மீதான இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதல் ஆறாவது தடவையாக இடம்பெற்றுள்ளது. தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையினர் தொடர் தாக்குதல் நடத்துவதை இந்திய கடலோர பாதுகாப்பு கப்பல் படை வேடிக்கை பார்ப்பது வேதனை தருகிறது.

பா.ஜ.க. அரசு தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் இந்திய எல்லைக்குள்ளே வந்து தாக்குதல் நடத்துவதையும் நமது மீனவர்களை கைது செய்வதையும் தடுக்க முயற்சிக்கவில்லை. கடந்த ஒக்டோபர் 14 ஆம் திகதி தமிழக மீனவர்கள் 27 பேரை கைது செய்து அவர்களின் ஐந்து படகுகளையும் இலங்கை கடற்படை பறித்துச் சென்றுள்ளது.

இலங்கை கடற்கொள்ளையர்களால் எமது மீனவர்கள் தாக்கப்படுவதற்கு பா.ஜ.க. அரசு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் விடுதலை செய்து மீன்பிடி படகுகளை திரும்பப் பெறவும் மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# ஐ.நாவும் உலக நாடுகளும் ஒன்றிணைந்து காசா போரை தடுத்து நிறுத்த வேண்டும்!

## - முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்

காசா பகுதியில் இடம்பெற்றுவரும் போரை ஐ.நாவும், அனைத்து உலக நாடுகளும் ஓரணியாக நின்று தடுத்து நிறுத்த வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட சமூக வலைதள பதிவில், போர் என்பதே கொடூரமானது. அது எந்த நோக்கத்துக்காக யாரால் நடத்தப்பட்டாலும், அதில் முதல் பலியாவது அப்பாவி பொதுமக்கள் தான். காசா பகுதியில் கடந்த 10 நாட்களாக நடந்துவரும் போர், உலக மக்கள் அனைவரையும் பதை பதைக்க வைத்துள்ளது.



உயிருக்கு பயந்து லட்சக் கணக்கான மக்கள் வெளியேறுவதும், மொத்தமாக அழிக்கப்பட்ட குடியிருப்புகளும், கடும் காய மடைந்த குழந்தைகளின் அழுகுரலும், குடிநீர், உணவின்றி தவிப்போரின் வேதனையும் இதயம் உள்ளோர் அனைவரையும் கலங்க வைக்கின்றன. ‘போரின்போது மருத்துவமனைகள் தாக்கப்படக் கூடாது’ என்பதை மீறி, மருத்துவமனை தாக்கப்பட்டு நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். மனிதம் மரத்துப்போய்விட்டதா?

உலக சமுதாயம் இனியும் இதை கைகட்டி வேடிக்கை பார்க்க கூடாது. ஐ.நா. மற்றும் அனைத்து உலக நாடுகள் ஓரணியாக நின்று, இந்த கொடும் போரை தடுத்து நிறுத்த வேண்டும். அப்பாவி பொது மக்களின் உயிர்களை காக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.